செ.வெ.எண்:14 நாள்:06.09.2021

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாராந்திர குறைதீர்க்கும் நாள் கூட்டம் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாராந்திர காணொளி மற்றும் நேரடி குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வாராந்திர காணொளி மற்றும் நேரடி குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வங்கிக் கடன் மற்றும் உதவித்தொகை உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து காணொளி காட்சி மூலம் மனுக்களும், மனு பெட்டி மூலமாக குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு, கல்வி உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து மொத்தம் 160 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் டாக்டர். அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியரின் தன் விருப்ப நிதியிலிருந்து வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு மாற்றுத்திறனாளி ஒரு நபருக்கு ரூ.76,500 மதிப்புள்ள இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், ஒரு நபருக்கு ரூ.6,500 மதிப்புள்ள தையல் இயந்திரமும், ஒரு நபருக்கு பழ வியாபாரத் தொழிலை மேம்படுத்தும் பொருட்டு ரூ.10,000/- க்கான காசோலையையும் என மொத்தம் ரூ.93,000 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளையும், மற்றும் திரு.அன்புராஜ் என்ற மாற்றுத்திறனாளி அளித்த மனுவிற்கு உடனடி தீர்வாக மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில் ரூ.7,650 மதிப்புள்ள மூன்று சக்கர சைக்கிளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.வி.ஷகிலா, சமூக பாதுகாப்பு துணை ஆட்சியர் திரு.கு.ராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.குணசேகரன், மாவட்ட துணை ஆட்சியர் (பயிற்சி) எம்.சௌமியா, மாற்றுத்திறனாளி நலத்துறை அலுவலர் திரு.வ.சீனிவாசன், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**